பார்ப்போம். வருகிற நிதி நிலை அறிக்கையில் மேலும் விரிவாக்கு வதைப்பற்றி இந்த அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு சொல்லிக்கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவரவர்களே, 50 நூால் கூட்டுறவுச் சங்கங்கள் என்று அமைச்சர் அறிவித்தார். எந்த எந்த மாவட்டத்தில், எத்தனை எத்தனை சங்கங்கள் அமைத்தார்கள் என்பதை அமைச்சரவர்கள் அறிவிக்க வேண்டு மெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் தமிழகம் பூராவும் உள்ள எல்லா 'ஏரியா' வையுமே 'கவர்' செய்துவிடும். ஒரு கூட்டுறவுச் சங்கத்தில் இணைக்கவில்லை யென்றால், அதோடு இணைத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, தமிழகம் பூராவும் இது 'கவர்' செய்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொன்னையாற்றின் குறுக்கே மேம்பாலம்

* வினா 31—திரு. துரை முருகன்: மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், வாலாஜா வட்டம், பொன்னை யாற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டும் வேலை முடிந்து விட்டதா?

(ஆ) இல்லை எனில், காலதாமதத்திற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) இல்லை.

(ஆ) இவ்வேலையைச் செய்து முடிக்க ஒப்புக்கொண்ட ஒப்பந்தக்காரர் வேலையைச் செய்து முடிப்பதில் காலதாமதம் செய்ததால் அவரது ஒப்பந்தம் முடிக்கப்பட்டது. மீதமுள்ள வேலை 1978 செப்டம்பர் மாதம் 15 ஆம் தேதிக்குள் முடிக்கும் வகையில் நெடுஞ்சாலைத்துறை இலாகாவே பல சிறு ஒப்பந்தக் காரர்கள் மூலம் வேலையைச் செய்து வருகிறது.

[1978 செப்டம்பர் 1

திரு. துரை முருகன் : தலைவரவர்களே, 1974 ஆம் ஆண்டு இந்தத் திட்டத்திற்குக் கலைஞர் அவர்கள் அடிக்கல் நாட்டினுர்கள். இப்பொழுது 1978 நடக்கிறது. 1974 ஆம் ஆண்டினுடைய மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு? இப்பொழுது உயர்ந்திருக்க வேண்டும். எவ்வளவு உயர்ந்திருக்கிறது? ஒப்பந்தக்காரர் காலதாமதத்தால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட விரயம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, 20—11—1974-ல் பாலம் கட்ட அடிக்கல் நாட்டப்பட்டது. ஆனுல், 20—2—1976-க்குள் அந்தப் பணி முடிக்கப்பட்டிருக்க வேண்டும். பல குறிப்பாணைகள் அனுப்பியும் ஒப்பந்தக்காரர் குறிப்பிட்ட காலத்தில் முடிக்காததால், 22—5—1976-ல் ஒப்பந்தம் முடிக்கப் பட்டு, நெடுஞ்சாலைத் துறையே அந்தப் பணியை மேற்கொண் டிருக்கிறது. இதனுல் ஒப்பந்தத் தொகை மிகையாகவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பழனிவேல், இது பொன்னையாற்றின் குறுக்கே பாலம் கட்டுகிற விவகாரம்.

திரு. என். பழனிவேல்: இந்த அரசாங்க வேலைகள், காண்ட்ராக்ட் விடுவதன் மூலம், அவர்களால் காலதாமதம் ஏற்பட்டு, இன்று பல வேலைகள், தமிழ்நாடு பூராவும் செயலாகாமல் நிறுத்தப் பட்டிருக்கின்றன. அதனுல், காண்ட்ராக்ட் முறையை அறவே ஒழித்துவிட்டு அரசாங்கமே நேரடியாகச் செய்தால், வேலைகள் ஒழுங்காக நடக்கும். இந்தக் காலதாமதம் ஏற்படாது. ஆகவே, காண்ட்ராக்ட் முறையை ஒழிப்பதற்கு இந்த அரசு உடனடியாக முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : காண்ட்ராக்டர்களின் குறைபாடுகளின் காரணமாக, எந்த எந்த வேலைகள் நின்றிருக் கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துக் கூறுவார்களானுல் அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும். காண்ட்ராக்ட் முறையை அறவே ஒழிக்கின்ற திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை. 'கன்ஸ்ட்ரக்ஷன் கார்ப்பரேஷன்' என்ற அமைப்பு ஒன்றை நிறுவி, அதன் மூலம் பெரிய காண்ட்ராக்ட்களை அரசே எடுத்து நடத்த ஒரு செயற்குறிப்பு இருக்கிறது.